# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை
## அசல் வழக்கு எண்.23/2022

பி.வா.சா.1– குறுக்கு விசாரணை – நாள் 24–03–2026.

பெயர் = வேலுச்சாமி

பி.வா.சா.–1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் கு.வி.–

(1) நான் வங்கியில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றேன் என்றால் சரிதான். வாதிக்கும், என் சித்தப்பா ராமநாதன் என்பவருக்கும் கூட்டாக பட்டா எண்.385/29 பட்டா இருந்தது என்றால் சரிதான். அந்த சொத்தில் வாதிக்கு இருந்த பாகத்தை க.வேலுச்சாமிக்கும் விற்றுவிட்டார் என்றால் சரிதான். மீத இடத்தை என் சித்தப்பா என் மனைவியான கோகிலவாணிக்கு விற்றுவிட்டார் என்றால் சரிதான். வாதி செல்வராஜீம் சேர்ந்துதான் என் மனைவிக்கு இடத்தை விற்றார்கள் என்று சாட்சி கூறுகிறார். என் மனைவிக்கு எழுதிக்கொடுக்கும்போதே செல்வராஜ் கூட்டுப்பட்டாவில் பெயர் இருந்ததால் கையெழுத்து செய்தார் என்றால் சரியல்ல ஆரம்பகாலத்தில் இருந்தே கூட்டுப்பட்டாவில் செல்வராஜ் பெயர் இருந்தது என சாட்சி கூறுகிறார். என் மனைவிக்கு கொடுத்த பத்திரத்தில் க.வேலுச்சாமிக்கு கொடுத்த இடத்தையும் சேர்த்து காண்பித்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

(2) வாதியிடமிருந்து கிரையம் வாங்கிய க.வேலுச்சாமி அந்த சொத்தை ஜோதி என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் அது எனக்குத் தெரியாது. ஜோதி அவருக்கு எழுதிக்கொடுத்த இடத்தை என் மனைவிக்கு எழுதிக்கொடுத்ததாக சொல்லி அதனை ரத்துசெய்யக்கேட்டு மாவட்ட பதிவாளரிடம் மனு கொடுத்தார் என்றால் சரிதான். காவல்நிலையத்திலும் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். மாவட்ட பதிவாளரிடம் நடந்த விசாரணைக்கு நான் ஆஜரானேன் அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது அதற்கான ஆதாரம் என்னிடம் இருப்பதாக சாட்சி கூறுகிறார். மாவட்ட பதிவாளரிடம் மனு கொடுக்கும்போதுதான் மேற்படி விவரம் வாதிக்கு தெரியவந்தது என்றாலும், அதன்பிறகு அந்த பத்திரத்தை ரத்து செய்யக்கேட்டு எங்களிடம் ஜோதிக்கு ஆதரவாக முறையிட்டார் என்றாலும் சரியல்ல. என் மனைவி கிரையம் பெற்றது

2021ம் வருடம் என்றால் சரிதான். ஜோதிக்கும் எனக்கும் உள்ள பிரச்சனையில் வாதி ஜோதிக்கு ஆதரவாக இருந்ததால் வாதிக்கும், எனக்கும் பிடிக்காமல் போனது என்றால் சரிதான்.

(3) வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்தின் விஸ்தீரணம் 111 ச.மீ என்றால் சரிதான். அதில் பாதி இடம் எனக்கு பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என சாட்சி கூறுகிறார். தபசில் சொத்து விவரத்தில் கொடுக்கப்பட்டுள்ள நான்குமால் விவரம் சரிதானா என்றால் ஆமாம். மேற்கு பக்கம் உள்ள ராமநாதன் வீட்டில்தான் நாங்கள் குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். 55 ச.மீ ஒப்படைப்பு கொடுத்ததாக சொல்லியுள்ள இடம் பி.வா.சா.ஆ.1 பட்டா என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1ல் சர்வே எண்.385/31–2 என காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மீதமுள்ள 55 ச.மீ இடத்தை வாதி என்னுடைய கடனை அடைத்துக்கொள் என சொல்லி பத்திரத்தில் கையெழுத்து போட்டு என்னிடம் கொடுத்துவிட்டார் என சாட்சி தன்னிச்சையாக கூறுகிறார். நான் சொல்வது போல் வாதி அவ்வாறு பத்திரம் எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1ல் காண்பிக்கப்பட்டுள்ளது தாவா சொத்து கிடையாது என்றால் சரியல்ல. ஒப்படைப்பு பெற்றுள்ளதை சர்வேயர் மூலம் அளந்து பார்த்தேனா என்றால் இல்லை.

(4) பி.வா.சா.ஆ.1ன் படி வருவாய்த்துறையில் பட்டா வாங்க முயற்சி செய்தேனா என்றால் செய்துள்ளேன் என சாட்சி கூறுகிறார். அவ்வாறு பட்டா வாங்க நான் முயற்சி செய்திருந்தால் பி.வா.சா.ஆ.1ல் தாவா சொத்து இல்லை என எனக்கு தெரியவந்திருக்கும் என்றால் சரியல்ல. வேறு இடத்திற்கு கொடுக்கப்பட்ட ஒப்படைப்பு பட்டாவை வைத்துக்கொண்டு வீம்பாக எதிர்வாதம் இவ்வழக்கில் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. தாவா இடம் காலியிடம் என்றால் சரியல்ல தோட்டமாக உள்ளது. தாவா இடம் தோட்டமாக உள்ளது என்பதை என்னுடைய எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் வீட்டிற்கு பக்கத்தில் தாவா இடம் இருப்பதால் கிரையம் கேட்டு வாதி கொடுக்க மறுத்துவிட்டதால் அனுபவத்தில் இருப்பதாக பொய்யாக எதிர்வாதம் செய்துவருகிறேன் என்றால் சரியல்ல. வாதி தாவா சொத்திற்கு அருகில் இல்லை வேறு இடத்தில் குடியிருக்கிறார் என்றால் சரிதான். தாவாச்சொத்து வாதிக்கு அரசு கொடுத்த ஒப்படைப்பின்படி பாத்தியம் என்றால் சரியல்ல. அரசாங்கம் கொடுத்த ஒப்படைப்பின்படி 1996லேயே வாதி பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு பாத்தியத்திற்கோ, அனுபவத்திற்கும் எந்த ஆவணங்களும் இல்லை முன்விரோதம்

காரணமாக என் சொத்து என்று பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவாச்சொத்து வாதிக்கு பாத்தியமான சொத்து என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2026.03.24 14:23:10 +0530